## WWF இந்தியா - குறை தீர்க்கும் வழிமுறை

WWF இந்தியா, தனது இடம் சார்ந்த செயல்பாடுகளால் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களின் பிரச்சனைகளைப் பற்றிய புகார்களை பெறவும், பதிலளிக்கவும் ஒரு வழிமுறையை நிறுவியுள்ளது. இது WWF-India, அதன் கொள்கைகள் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் சமூக பாதுகாப்பு கட்டமைப்பு(ESSF) ஆகியவற்றையின் நடைமுறையை பலப்படுத்தவும், குறிப்பாக குறைதீர்க்கும் செயல்முறையில் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் உதவும் .மேலும் இது WWF-India -வின் பாதுகாப்பு செயல்முறைகளை திறம்பட செயல்படுத்தவும் மற்றும் அமைப்பின் சமூக மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த செயல்பாடுகளின் செயல் திறனை மேம்படுத்தவும் உதவும். இச்செயல்முறை WWF இந்தியாவின் நேர்மை,வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு ஆகியவற்றின் மீதான நெறிமுறைகளின் மீதான உறுதிப்பாட்டின் ஒரு முக்கிய பகுதியாகும்

குறைகளைத் தீர்க்கும் செயல்முறையானது உரையாடல் ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உடன்பாட்டின் அடிப்படையில் அமைகிறது.

குறைகளை/புகார்களை தகுந்த நேரம் மற்றும் தகுந்த முறையில் கையாள்வது முரண்பாடுகளை தீர்க்கவும் பரஸ்பர புரிதலை மேம்படுத்தவும் பொறுப்புணர்வை வலுப்படுத்தவும் உதவுவதோடு இணைந்து செயல்படுவதற்கான அடித்தளத்தையும் வழங்குகிறது.

யாரெல்லாம் புகார் அளிக்கலாம் மற்றும் யார் பாதிக்கப்பட்டவராக கருதப்படுகிறார்கள்

WWF இந்தியாவின், இடம் சார்ந்த செயல் மூலம் விளைந்த எதிர்மறை தாக்கத்தினாலும் அதன் சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் நெறிமுறைகளை**ப்** பின்பற்ற**த்** தவறிய காரணத்தினா**லும்** பாதிக்கப்பட்ட அல்லது பாதிக்கப்படக்கூடும் என்று நம்புகிற ஏதேனும் சமூகக் குழுவினர் (குறைந்தது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள்) அல்லது சமூக நிறுவனம் “பாதிக்கப்பட்ட தரப்பினர்” என்று கருதப்படுகி**ன்ற**ன**ர்**.

பாதிக்கப்பட்ட எந்தவொரு தரப்பினரும் குறைகளை**த்** தெரிவிக்கலாம்/புகார் அளிக்கலாம். பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பாக WWF இந்தியாவிடம் குறை/புகார் தொடர்பாக பேசு**வதற்கு** ஏதேனும் நபர் அல்லது அமைப்பு (பிரதிநிதிகள்) **பாதிக்கப்பட்ட** தரப்பினர் சார்பாக குறைகளைத் தெரிவிக்கலாம்.

புகார் அளிக்கும் பிரதிநிதி தான் பிரதிநிதித்துவப்படுத்தும் பாதிக்கப்பட்ட தரப்பினரின் பிரதிநிதியாக விளங்க உறுதியான ஆதாரத்தை வழங்க வேண்டும்.

பிரதிநிதியின் சில எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு: ஒரு கிராமத் தலைவரைப் போன்ற சமூகத்திலிருக்கும் அதிகாரம் உடைய நபர்; பாரம்பரிய அல்லது வழக்கமான அதிகாரம் உடைய நபர்;

பாதிக்கப்பட்ட தரப்பினரால் கோரப்பட்டதற்கான உறுதியான ஆதாரங்களைக் காட்ட முடிந்தால் உள்ளூர், தேசிய அல்லது சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனம்.

**உறுதியான சான்றுகள்** ஆனது கிராம சபைத் தீர்மானமாக இருக்கலாம்; குறைந்தது 10 கிராம உறுப்பினர்களால் கையெழுத்திடப்பட்ட பஞ்சாயத்து கடிதமாக இருக்கலாம்.

புகார்தாரர்கள் விஷயம் ரகசியமாக இருக்க வேண்டும் என்று கோரலாம் என்றாலும் **அடையாளம் குறிப்பிடாத** புகார்கள் கருத்தில் கொள்ளப்படாது.

குறை/புகார் சமர்ப்பிப்பதற்கான மாதிரி

குறை/புகாரில் பின்வரும் தகவல்கள் இடம்பெற வேண்டும்:

- புகார்தாரரின் பெயர் மற்றும் தொடர்பு கொள்வதற்கான தகவல் (புகார்தாரரால் நேரடியாக தாக்கல் செய்யப்பட முடியாத நிலையில், பிரதிநிதி தரப்பினர் தக்க சான்றுகள் மூலம் செய்ய அதிகாரம் உள்ளது.)

- பாதிப்பாக கருதப்படும் திட்டம் அல்லது செயல்பாடு மற்றும் குறை/புகாரின் குறிப்பிட்ட இடம் பற்றிய தகவல்.
- குறிப்பிட்ட குறை/புகாரின் விவரங்கள் மற்றும் நிகழ்ந்த தேதி
- எதிர்கொண்ட/அனுபவித்த எதிர்மறை தாக்கம்(தாக்கங்கள்)
- வேறு ஏதேனும் தொடர்புடைய தகவல்கள் அல்லது ஆவணங்கள்

- WWF இந்தியாவை /அதனுடைய செயல்பாட்டு கூட்டாளர்களைத் தொடர்பு கொள்வது மூலம் புகார்கள்/பிரச்சனையைத் தெரிவிக்க/தீர்க்க எடுக்கப்பட்ட ஏதேனும் முயற்சிகள்

- இரகசியத்தன்மை கோரப்படுகிறதா (காரணங்களைத் தெரிவிக்கவும்)

குறை/புகாரை ஆங்கிலம், இந்தி அல்லது ஏதேனும் உள்ளூர் மொழியில் தாக்கல் செய்யலாம்.

குறை / புகாருக்கான வரைமுறைகள்

குறைகள் என்பது WWF இந்தியாவின் இடம் சார்ந்த செயல்பாடு மூலம் சமூகம் (சமூகங்கள்) தாங்கள் நேரடியாகப் பாதிக்கப்படுவதாக உணரும் பிரச்சனைகள், குறிப்பாக சமூக மற்றும் சுற்றுச்சூழல் அபாயங்கள் தொடர்பானவை.

கூடுதலாக புகார்கள் என்பது WWF இந்தியா மற்றும் அதன் பணிகள் குறித்து எவர் ஒருவராலும் எழுப்பப்படும் ஆலோசனைகள் மற்றும் பிரச்சனைகள்.

குறை/புகாரை பெறும் செயல்முறை

குறைகளை/புகார்களை WWF இந்தியாவுக்கு அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி: grievances@wwfindia.net அல்லது 'குறை தீர்க்கும் அமைப்பு, C/o. மனித வளத்துறை, WWF இந்தியா, 172 B லோடி சாலை, புது தில்லி 110003' என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பலாம்.

---

1சமுதாயம்(ங்கள்) என்பது WWF இந்தியா இணைந்து வேலை செய்யும் பழங்குடியினர் அல்லது மற்ற உள்ளூர் சமுதாய குழு அல்லது WWF இந்தியாவின் நிலப்பரப்பு எல்லைக்குள் இருக்கும் உறுப்பினர்கள்